## முதல்வர் மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# கலைஞரின் நினைவைப் போற்றும் மகத்தான திட்டங்கள்!

### முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாள் இன்று!

தமிழக மக்களின், உடன் பிறப்புகளின் நெஞ்சங்களில் தி.மு.க.வை பதிய வைத்து மக்களுக்கு கலைஞர் வழியில் நல் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார் நமது கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

தமிழகத்தை முன்னேறிய மாநிலமாக மாற்றிய சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவருக்கு நமது கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

“கலைஞரது புகழ், கலைஞரது தொண்டு, கலைஞரது சேவை, கலைஞரது மக்கள் பணி, கலைஞரது உழைப்பு”

இவைகளுக்கெல்லாம், மகுடம் சூட்டும் வகையில் பல வரலாற்று நிகழ்வுகளை நிறைவேற்றி வருகிறார்.

2021 மே7 ஆம் தேதி அன்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்... என்று கூறி முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதில் இருந்து தமிழ் மக்களின் தமிழ் நாட்டின் வளர்ச்சிக்காக, வளத்துக்காக தன்னையே அர்ப்பணித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, கழகத் தலைவராக அரசின் சார்பிலும், முதல்வராக தமிழக மக்கள் சார்பிலும் கலைஞர் புகழுக்கு மேலும் புகழ்சேர்க்கும் வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைத்திட்ட வரலாற்று நிகழ்வுகளைப் பார்ப்போம்.

**அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் சிலை!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 7.8.2018ஆம் ஆண்டு நம்மை விட்டுப் பிரிந்தாலும், இன்றும் நம் அனைவரின் நினைவுகளில், தமிழ் நாட்டு மக்களின் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

கலைஞர் அவர்கள் உயிருக்கு உயிராகப் போற்றும் கழகத் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம் வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை 16.12.2018 அன்று அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி, ராகுல் காந்தி, கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன், ஆந்திர மாநில முன்னாள்(அப்போது) தற்போதைய முதல்வர் சந்திரபாபு நாயுடு, புதுச்சேரி மாநில அப்போதைய முதல்வர் நாராயணசாமி உள்ளிட்ட தலைவர்களை அழைத்து வந்து, பேராசிரியர் அவர்கள் முன்னிலையில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இவ்விழாவில் தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள், திரையுலகப் பெருமக்கள், கவிஞர்கள், கழக முன்னணியினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அண்ணா அறிவாலயம் கலைஞர் அவர்களுக்கு கோவில். அவர் தினந்தோறும் காலை மாலை என்று அறிவாலயத்திற்கு வருகை தந்த இடம். அந்த இடத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலையை நிறுவி வரலாற்றில் காலகாலத்திற்கும் இடம்பிடிக்க வைத்துள்ளார் ‘திராவிட மாடல்’ முதல்வர்!

**முரசொலி வளாகத்தில் கலைஞர் சிலை!**

கலைஞர் அவர்களால், ‘என் மூத்த பிள்ளை முரசொலி’ என்று அழைக்கப்பட்ட முரசொலி வளாகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியை வரவழைத்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்.

இன்று முரசொலி தன் தந்தையை இழந்து தவிக்கும் நிலையில், முரசொலி வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உடன் பிறப்புகளுக்கு கடிதம் எழுதுவதைப் போன்று அமைக்கப்பட்ட திருவுருவச் சிலை முரசொலி வரலாற்றில் இடம் பிடித்திருக்கிறது.

**சட்டப்பேரவையில் கலைஞர் திருவுருவப் படம்!**

தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழக சட்டமன்ற வரலாற்றில், அப்போதைய மேதகு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களை அழைத்து சட்டப்பேரவையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை 2.8.2021 அன்று திறந்து வைத்து கலைஞர் அவர்களுக்கு பெருமை சேர்த்தார்.

அப்போது ராம் நாத் கோவிந்த் அவர்கள் உரையாற்றுகையில், “இந்திய வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த தலைவர் கலைஞர், தமிழ்நாடு சட்டமன்றத்தில் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்தை திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன், பெருமை அடைகிறேன். உண்மையில் இது முக்கியத்துவம் வாய்ந்த நாள், தமிழ் இலக்கியத்திலும் தமிழக அரசியலிலும் முக்கியப் பங்காற்றியவர் கலைஞர், தமிழுக்கு செம்மொழி தகுதியைப் பெற்றுக் கொடுத்தவர் கலைஞர், தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ் சினிமாவிற்கும் பெரும் பங்காற்றியவர் கலைஞர், புரட்சிகரமான கருத்துக்கள் மூலம் சமூக, சீர்திருத்தத்திற்கு வித்திட்டவர் கலைஞர்” என்று புகழாரம் சூட்டினார்.

இந்தியாவிலேயே தமிழக சட்டமன்ற வரலாற்றுக்கென்று தனி வரலாறு உண்டு, அந்த சட்டமன்ற வரலாற்றில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் அமையப் பெற்று அந்த வரலாற்றுக்கு மேலும் பெருமை சேர்த்திருக்கிறது.

கழகத்தினருக்கு சென்னை அண்ணா அறிவாலயம் தான் பயிற்சிப் பட்டறை. அதே போன்று டெல்லியிலும் ஒரு பயிற்சிப் பட்டறையை தொடங்கிட வேண்டும் என்று திட்டமிடப்பட்டு, 1.4.2022 அன்று புதுடெல்லியில் தி.மு.க.விற்கென்று அண்ணா கலைஞர் அறிவாலயம் கட்டி தி.மு.க. வரலாற்றை இந்தியா முழுவதும் பரப்பிய நமது முதல்வர், கழகத் தலைவர் அவர்கள், அண்ணா கலைஞர் அறிவாலயத்தில் அண்ணா அவர்களோடு கலைஞர் அவர்களின் சிலையினையும் திறந்தது ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

**ஓமந்தூரார் தோட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலை!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை 28.5.2022 அன்று இந்திய குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு அவர்கள் தமது திருக்கரங்களால் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஓமந்தூரார் தோட்டத்தில் திறந்து வைத்தார்.

தனது தந்தைக்கு, தலைவருக்கு சிலை வடித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில்,

வாழ்வில் ஓர் பொன்னாள், எந்நாளும் மகிழ்ந்து போற்றும் நன்னாள், தமிழ் நிலத்தை வான் உயரத்துக்கு உயர்த்திய தலைவர் கலைஞர் அவர்களுக்கு 16 அடி உயர சிலை எழுப்பப்பட்டுள்ளது.

தந்தை பெரியாருக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்குமிடையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை அமைந்து இருப்பது பொருத்தமாக இருக்கிறது. இருவரிடமும் அரசியல் பாடம் படித்த கலைஞர் அவர்களின் சிலை இருவருக்கும் இடையில் அமைந்து இருப்பது கூடுதல் மகிழ்ச்சி. கலைஞர் அவர்களின் கனவுக் கோட்டையான ஓமந்தூரார் தோட்டத்திலேயே சிலை அமைந்து இருக்கிறது. இந்தியாவில் பல குடியரசுத் தலைவர்களையும் நிலையான ஆட்சியையும் உருவாக்க துணை நின்றவர் கலைஞர். பன்முகத் தன்மை கொண்ட கலைஞர் எந்தத் துறையில் பயணித்தாலும் அதில் கோலோச்சினார் என்று உரையாற்றினார்.

ஓமந்தூரார் தோட்டத்தில் அமைந்துள்ள 16 அடி கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலையைத் தாங்கி நிற்கும் பீடத்தின் ஒரு பகுதியில் கல்வெட்டில் என்ன எழுதி இருக்கிறது? கலைஞர் அவர்கள் நமக்களித்த தாரக மந்திரம், ஆம், அது தான் கலைஞர் அவர்களின் ஐம்பெரும் முழக்கம்.

**அண்ணா வழியில் அயராது உழைப்போம் !**
**ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம் !**
**இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் !**
**வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் !**
**மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி !**

என்ற இந்த ஐம்பெரும் முழக்கம்தான் கலைஞர் சிலையின் ஒரு பக்க கல்வெட்டில் வடிக்கப்பட்டுள்ளது.

**கும்பகோணத்தில் கலைஞர் பெயரில் பல்கலைக் கழகம்!**

**திருவாரூரில் கலைஞர் கோட்டம்!**

கலைஞர் பிறந்த மண், 14 வயதில், தமிழ் மொழியைக் காக்க தமிழ்க்கொடி ஏந்தி வீதியில் இறங்கி போராடிய கலைஞர் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில் திருவாரூரில் எழிலார்ந்த முறையில் கலைஞர் கோட்டம் அமைத்தார் நமது கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இக்கலைஞர் கோட்டத்தை 20.6.2023 அன்று பீகார் மாநில முன்னாள் துணை முதல்வர் தேஜஸ்வீ யாதவ் முன்னிலையில் திறந்து வைத்தார். திருவாரூரில் அஞ்சுகம் அம்மையார் நினைவிடம் அமைந்துள்ள காட்டூரில் தயாளு அம்மாள் அறக்கட்டளை சார்பில் ரூபாய் 12 கோடியில் 7000 சதுர அடி பரப்பளவில் கலைஞர் கோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. கலைஞர் கோட்டத்தை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “நெஞ்சில் மகிழ்ச்சியும், நெகிழ்ச்சியும் நிறைந்திருக்கக் கூடிய நிலையில் உங்கள் முன்பு நான் நின்று கொண்டிருக்கிறேன். வான் புகழ் வள்ளுவருக்கு தலைநகரில் கோட்டம் கண்ட, தலைவர் கலைஞர் அவர்களுக்கு திருவாரூரில் கோட்டம் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. தனது 14 வயதில் எந்த திருவாரூர் வீதிகளில் போர்ப்பரணி பாடி வந்தாரோ அதே திருவாரூரில் கலைஞர் அவர்களுக்கு கோட்டம் எழுப்பப்பட்டுள்ளது. எனது தாயார் தயாளு அம்மாள் அறக்கட்டளை சார்பில் கலைஞர் கோட்டம் கட்டப்பட்டு அது திறக்கப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரையில் என் தந்தைக்கு என் தாய் எழுப்பிய அன்புக் கோட்டையாகவே நான் இதைக் கருதுகிறேன்” என்று நெகிழ்ச்சியுடன் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.



திருவாரூரில் கலைஞர் கோட்டம் முன்பு முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலை!

**தமிழ்நாடு அரசு முன்னெடுத்த கலைஞர் நூற்றாண்டு விழா!**

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஓர் ஆண்டு காலம் (3.6.2023 - 3.6.2024) தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் என்று பார்த்தோமேயானால், கலைஞர் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் மாவட்டம் தோறும் தமிழ்நாடு அரசு சிறப்பாகக் கொண்டாடியது.

கலைஞர் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் விதமாக 2023 மே 22ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. தொடர்ச்சியாக தலைமைச் செயலாளர் தலைமையில் ஐந்து முறை ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்றன. கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடிட அமைச்சர்கள் தலைமையில் 12 சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

ஜூன் 2ஆம் தேதி 2023 அன்று காந்தியடிகள் பேரன் கோபாலகிருஷ்ணன் காந்தி அவர்கள் “கலைஞர் 100” இலச்சினையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் வெளியிட்டார்.

கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான் போட்டியில் பங்கேற்று சாதனை படைத்த 73,206 பேருக்கு முதல்வர் சான்றிதழ் வழங்கினார்.

திண்டுக்கல் மாவட்டம் காளாஞ்சிப்பட்டியில் கலைஞர் நூற்றாண்டு ஒருங்கிணைந்த போட்டித் தேர்வு மையம் பிப்ரவரி 27 ஆம் தேதி திறக்கப்பட்டது.

கலைஞர் நூற்றாண்டை ஜூன் 2023 முதல் ஜூன் 2024 வரை சிறப்பாக பள்ளிகளில் கொண்டாடிட ரூபாய் 8.34 கோடி ஒதுக்கப்பட்டு பள்ளிகளில் தமிழ்ப்பாடத்தில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு ரொக்கப்பரிசு வழங்க கலைஞர் நூற்றாண்டு தமிழ் ஊக்குவிப்பு நிதி ஒதுக்கப்பட்டு மாணவர்களுக்கு ரொக்கப்பரிசுகள் வழங்கப்பட்டன.

கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்புக் குழுக்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டது. அதில் தமிழகத்தில் வாழும் 275 தமிழறிஞர்களைச் சிறப்பிக்க ஒவ்வொருவருக்கும் ரூபாய் 10 ஆயிரம் வழங்கப்பட்டது.

அமைச்சர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட 12 குழுக்கள் சார்பில் கருத்தரங்கம், புகைப்படக் காட்சி, பட்டிமன்றம், முத்தமிழ் தேர் பவனி, கலை நிகழ்ச்சி, கவியரங்கம், மலர் மற்றும் குறும்படம் வெளியீடு, மெல்லிசை நிகழ்ச்சி மற்றும் பல்வேறு வகையான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

**(1 ) சட்டமன்ற நாயகர் கலைஞர்**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சட்டமன்ற நாயகர் கலைஞர் குழுவின் மூலம் 37 மாவட்டங்களிலும் 120 பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் கருத்தரங்கம் நடைபெற்றது.

**(2) இதழாளர் கலைஞர்**

இதழாளர் கலைஞர் புகைப்படக் கண்காட்சி 18.10.2023 அன்று கோவையில் நடைபெற்றது.

**(3) ஏழைப்பங்காளர் கலைஞர்**

ஏழைப்பங்காளர் கலைஞர் இராமநாதபுரம் மாவட்டத்தில் 21.10.2023 அன்று கருத்தரங்கம், பட்டிமன்றம் நடத்தப்பட்டது. அரங்கம் திறந்து கண்காட்சியும் நடத்தப்பட்டது.

**(4) எழுத்தாளர் கலைஞர்**

எழுத்தாளர் கலைஞர் திருநெல்வேலி மாவட்டத்தில் 4.11.2023 அன்று கருத்தரங்கம் நடத்தப்பட்டது. கலைஞரின் அரும்பங்களிப்பை எடுத்துரைக்கும் வகையில் முத்தமிழ் தேர் கன்னியாகுமரியில் தொடங்கி பல்வேறு மாவட்டங்கள் வழியாக சென்னை வந்தடைந்தது.

**(5) பகுத்தறிவுச் சீர்திருத்தச் செம்மல் கலைஞர்**

பகுத்தறிவுச் சீர்திருத்தச் செம்மல் கலைஞர் புகைப்படக் கண்காட்சி 25.11.23 அன்று வேலூரில் நடைபெற்றது. மற்றும் பகுத்தறிவுச் சீர்திருத்தச் செம்மல் கலைஞர் விழா மலர் வெளியிடப்பட்டது.

**(6) தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்**

தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் மையக் கருத்து பாடல் வெளியீடு மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் கரூர் மாவட்டத்தில் 4.11.2023 அன்று நடத்தப்பட்டது.

**(7) கலைஞர் பண்பாட்டு பாசறை**

கலைஞர் பண்பாட்டு பாசறை கருத்தரங்கம், வேலூர் மாவட்டத்தில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.

**(8) நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர்**

நவீன தமிழ் நாட்டின் சிற்பி கலைஞர் 27.2.2023 அன்று சேலம் மாவட்டத்தில் புகைப்படக் கண்காட்சி, கலை நிகழ்ச்சி, கவியரங்கம் சிறப்பாக நடத்தப்பட்டு விழா மலர் வெளியிடப்பட்டது.

**(9) நிறுவனங்களின் நாயகர் கலைஞர்**

நிறுவனங்களின் நாயகர் கலைஞர் சென்னை மாவட்டத்தில் 25.11.2023 அன்று கண் காட்சி, கருத்தரங்கம் நடத்தப்பட்டு, மற்றும் நிறுவனங்களின் கலைஞர் மலர் மற்றும் நாயகர் குறும்படம் வெளியிடப்பட்டது.

**(10) கலைஞர் கலைஞர்**

கலைஞர் கலைஞர் விழாக்குழுவின் சார்பில் இசையாய் கலைஞர் காணொலியுடன் கூடிய மெல்லிசை நிகழ்ச்சி சென்னை கலைவாணர் அரங்கில் 8.1.2024 அன்று நடத்தப்பட்டது.

**(11) தமிழ்த்தாயின் தவப்புதல்வன் கலைஞர்**

தமிழ்த்தாயின் தவப்புதல்வன் கலைஞர் குழுவிற்கு ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநர் பெயரில் தமிழ்நாடு மாநிலம் தலைமைக் கூட்டுறவு வங்கியில் நிரந்தர வைப்பாக வைக்கப்பட்டு அதன் வரவு கலைஞரின் பன்முகத் தன்மையை போற்றும் வகையில் பயன் படுத்த அறிவுறுத்தி வழங்கப்பட்டுள்ளது.

**(12) சமூக நீதிக் காவலர் கலைஞர்**

சமூக நீதிக் காவலர் கலைஞர் குழு மூலம் கல்லூரிகளில் பல்வேறு வகையான போட்டிகள் நடத்தப்பட்டன.

அதுமட்டுமின்றி பல்வேறு துறைகள் சார்பில் கலைஞர் பெயரில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

தமிழக அரசின் கூட்டுறவுத்துறை சார்பில் பல்வேறு கடன்கள் வழங்கும் முகாம்கள், தீயணைப்புத்துறை சார்பில் பயிற்சி, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், நெடுஞ்சாலைத் துறை சார்பில் 100 மேம்பாலங்கள் புதுப்பித்தல், தீயணைப்புத் துறை சார்பாக 35 மாவட்டங்களில் மரக்கன்றுகள் நடும் விழாக்கள் நடத்தப்பட்டன. சுற்றுலாத்துறை சார்பில் 16 மாவட்டங்களில் தாய்மைப்பணி முகாம், அருங்காட்சியகங்கள் துறை சார்பில் மாணவ - மாணவியர்களுக்கு போட்டிகள், தோட்டக்கலைத் துறை சார்பில் செம்மொழிப் பூங்காவில் மலர்க்கண்காட்சி நடத்தப்பட்டன என்று இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

**கலைஞர் நாணயம் வெளியீடு!**

கலைஞர் நூற்றாண்டு விழாவின்போது முத்தாய்ப்பாக கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் கலைஞர் நூற்றாண்டு நாணயத்தை 18.8.2024 அன்று வெளியிட்டார்.

**கிண்டியில் கலைஞர் உயர் சிறப்பு மருத்துவமனை!**


கிண்டியில் ரூ.240.54 கோடி மதிப்பீட்டில் 1000 படுக்கை வசதிகளுடன் கூடிய உலகத் தரத்தில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு மருத்துவ மனையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.6.2023 அன்று திறந்து வைத்தார்.

**கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்!**

சென்னையின் வளர்ச்சி அதிகரிக்க, அதிகரிக்க போக்குவரத்து நெரிசலும் அதிகரிக்கும் என்பதனை கருத்தில் கொண்டு போக்குவரத்து நெரிசலைக் குறைக்க சென்னைக்கருகே கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய 59.86 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை 30.6.2023 அன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

**கலைஞர் மகளிர் உரிமைத் தொகை!**

தி.மு.க.தேர்தல் அறிக்கையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. அதன்படி கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் ஒரு கோடிக்கும் அதிகமான மகளிர்க்கு மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.9.2023 அன்று தொடங்கி வைத்தார்.



**கலைஞர் கனவு இல்லம்!**

2030க்குள் குடிசை இல்லா தமிழகத்தை உருவாக்கும் வகையில் கலைஞரின் கனவு இல்லம் என்ற புதிய திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்து அதன்படி ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சம் வீடுகள் கட்டும் வகையில் திட்டமிடப்பட்டு அதற்கான ஆணைகளை முதல்வர் அவர்கள் வழங்கினார். தொடர்ந்து இத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம்!**

தற்போது சென்னை மாநகரின் அடையாளங்களில் ஒன்றாக இருப்பது உலகத்தில் உள்ள அனைத்து நூல்களையும், மருத்துவம், பொறியியல், ஆராய்ச்சியாளர்கள், மாணவ மாணவியர், சிறார்கள் குழந்தைகள் என்று அனைத்துத் தரப்பினரும் படிப்பதற்காக உருவாக்கிய நூலகம் ஒன்று உண்டென்றால் அதுதான் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம்.

**கலை நகர் மதுரை!**



**“கலைஞர் நூற்றாண்டு தொடக்கமான கடந்த ஜூன் 15ஆம் தேதி கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவ மனையை சென்னை சைதாப்பேட்டை, கிண்டியில் திறந்து வைத்தேன். ஒருமாதம் கழித்து கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மதுரையில் திறந்து வைத்திருக்கிறேன். அந்த பெருமிதத்தோடு இங்கு வந்துள்ள அனைவரையும் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்வான் இந்த ஸ்டாலின். இவை இரண்டும் தேர்தல் அறிக்கையில் அளிக்காத வாக்குறுதிகள், தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை என்றால் தமிழ்நாட்டினுடைய கலைநகர் மதுரை. தலைநகரில் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அமைத்துத் தந்தவர் அவர் தம்பி கலைஞர்”.**



அதே போன்றதொரு நூலகத்தினை மதுரை மாநகரில் அமைத்திட முடிவு செய்து மதுரை மாநகரில் புதுநத்தம் சாலை பகுதியில் பொதுப்பணித்துறை சார்பில் ரூபாய் 120.75 கோடி மதிப்பீட்டில் பிரமாண்டமாக உருவாக்கப்பட்டதுதான் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூற்றாண்டு நூலகம்!

இந்த நூலகத்தில் ஏழு அடுக்கில் அனைத்து வசதிகளும் உள்ளடக்கிய அதி நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட நூலகமாகும் கலைஞர் நூற்றாண்டு நூலகம். அனைத்துத் தரப்பினரும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம் 15.7.2023 அன்று தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து தமிழ்நாட்டு மக்களுக்கு குறிப்பாக மதுரை மற்றும் மதுரையைச் சுற்றியுள்ள மக்களுக்காக அர்ப்பணித்தார். கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றுகையில்,

“கலைஞர் நூற்றாண்டு தொடக்கமான கடந்த ஜூன் 15 ஆம் தேதி கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையை சென்னை சைதாப்பேட்டை, கிண்டியில் திறந்து வைத்தேன். ஒருமாதம் கழித்து கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மதுரையில்திறந்துவைத்திருக்கிறேன். அந்த பெருமிதத்தோடு இங்கு வந்துள்ள அனைவரையும் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன். சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்வான் இந்த ஸ்டாலின். இவை இரண்டும் தேர்தல் அறிக்கையில் அளிக்காத வாக்குறுதிகள், தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை என்றால் தமிழ் நாட்டினுடைய கலைநகர் மதுரை. தலைநகரில் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அமைத்துத் தந்தவர்அவர்தம்பி கலைஞர்.

இந்தக் கலைநரில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் எனும் தென் தமிழ்நாட்டின் அறிவாலயத்தை இந்த அடியேன் அமைத்திருக்கிறேன். சங்க கால இலக்கியங்களை சாமானியருக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் நூலகத்தை இங்கு வைக்காமல் வேறு எங்கு வைக்க முடியும். சிலப்பதிகாரம் குறித்தும் நீதி கேட்ட கண்ணகி குறித்தும் கலைஞர் தீட்டாத எழுத்து ஓவியங்கள் இல்லை. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என அறச்சீற்றம் கொண்டு கண்ணகி எரித்த இந்த நகரத்தில் இலட்சக்கணக்கான நூல்கள் கொண்ட இந்த நூலகத்தினால் அறிவுத் தீ பரவப் போகிறது. திராவிட இயக்கம் என்றாலே அறிவியக்கம்தான். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக் கழகத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அதற்கு அறிவகம் என்று பெயர் வைத்தார். சென்னையில் புதிதாக தலைமைக் கழகத்தை அமைத்த கலைஞர் அண்ணா அறிவாலயம் என்று பெபயர் வைத்தார். ஏனென்றால் இது அரசியல் இயக்கம் மட்டும் இல்லை அறிவியக்கம்” என்றார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரால் மதுரையில் அமைந்துள்ள இந்த ‘கலைஞர் நினைவு நூலகம்’ வரலாற்று பெருமையைப் பேசும், தென்னக தமிழக மக்களின் அறிவுப் பசியைப் போக்கும்!

**மதுரை -அலங்காநல்லூரில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்!**

அலங்காநல்லூர் என்றாலே உலகப் பிரசித்தி பெற்ற ஜல்லிக்கட்டு நம் நினைவுக்கு வரும். அதே போன்றதொரு நினைவு வருவதைப் போன்றுதான் மதுரை அலங்காநல்லூரில் ரூபாய் 62.78 கோடியில் பிரமாண்டமாக கட்டப்பட்ட கலைஞர் ஏறுதழுவுதல் அரங்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.1.2024 அன்று திறந்து வைத்தார்.



குமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு - கடலுக்கு மேலே கண்ணாடி இழைப் பாலம்!

**முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர் உள்ளிட்ட பெருந்தலைவர்களின் நினைவிடங்களை எல்லாம் பார்த்துப் பார்த்து அமைத்து அவர்களின் நினைவிடங்களையும் வரலாற்றில் இடம் பெறச் செய்தார்.

அதே போன்று இன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு 2.21ஏக்கர் பரப்பளவில் ரூ 39 கோடி மதிப்பீட்டில் சென்னை மெரீனா கடற்கரையில் கலைஞர் நினைவிடம் அமைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் அறிவித்தார். அதன் படி புதுப்பிக்கப்பட்ட கலைஞர் நினைவிடத்தை கட்ட முடிவு செய்து கடந்த 26.2.2024 அன்று முதல்வர் திறந்து வைத்தார்.

**ஈ.சி.ஆர். சாலைக்கு கலைஞர் பெயர்!**

சென்னையில் இருந்து புதுச்சேரி செல்லும், கிழக்கு கடற்கரைச் சாலைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி சாலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு அச்சாலையும் கலைஞரின் பெயரை காலமெல்லாம் சொல்லும் வரலாறாகியிருக்கிறது.

**குமரி முனையில் கலைஞர் வடித்தெடுத்த திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2000 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட 133 அடி உயர அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் முடிவடைந்து வெள்ளிவிழா கண்டதை கொண்டாடும் வகையில் திருவள்ளுவர் சிலைக்கருகே கண்ணாடி மேம்பாலம் அமைத்து இதற்கான விழா 30.12.2024 அன்று எடுத்து கலைஞர் அவர்கள் அமைத்த 133 அடி கொண்ட அய்யன் வள்ளுவர் சிலைக்கு மேலும் பெருமை சேர்த்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**முத்தமிழறிஞர் கலைஞர் விருது**

தேவநேயப் பாவாணர் விருது, வீரமாமுனிவர் விருது, தூய தமிழ் ஊடக விருது, நற்றமிழ்ப் பாவலர் விருது, தூயதமிழ்ப் பற்றாளர் விருது ஆகிய ஐந்து விருதுகளும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் மூலம் இலக்கண விருது, இலக்கிய விருது, மொழியியல் விருது என மூன்று விருதுகளும் வழங்கப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து 2024 ஆம் ஆண்டு முதல் முத்தமிழ் அறிஞர் ‘கலைஞர் விருது’ என்ற புதிய விருது அரசால் அறிவிக்கப் பட்டது. இவ்விருது கடந்த ஆண்டு 2024 முதல் முதலாக புலவர் முத்துவாவாசிக்கு வழங்கப்பட்டது.

**கலைஞரின் வள்ளுவர் கோட்டம் ரூ.80 கோடியில் புதுப்பிப்பு!**

கலைஞர் அவர்களின் பெயரை குறிப்பிட்டாலே நம் நினைவுக்கு வருவது சென்னை வள்ளுவர் கோட்டம், கடந்த ஆட்சியினர் வள்ளுவர் கோட்டத்தைச் சிதைத்து விட்டனர். தற்போது வள்ளுவர் கோட்டம் ரூபாய் 80 கோடியில் புதுப்பிக்கப்பட்டு எழிலார்ந்த முறையில் அழகுற காட்சியளிக்கின்றது. இந்த புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.6.2025 அன்று திறந்து வைத்தார்.

**கலைஞர் எழுதுகோல் விருது**

இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும் விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றி வரும் ஒரு சிறந்த இதழாளருக்கு 2021 ஆம் ஆண்டு முதல் ‘கலைஞர் எழுதுகோல் விருதுகள்’ வழங்கப்பட்டு வருகின்றன. முதன் முதலாக தினத்தந்தி ஐ.சண்முகநாதன் அவர்களுக்கும், தொடர்ந்து வி.என்.சாமி அவர்களுக்கும், நக்கீரன் கோபால் அவர்களுக்கும், திருமதி சுகிதா சாரங்க ராஜ் அவர்களுக்கும் இவ்விருது வழங்கப் பட்டுள்ளது.

**கலைஞர் கலைத்துறை வித்தகர் விருது**

தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் 2022-ஆம் ஆண்டு முதல் கலைஞர் கலைத்துறை வித்தகர் விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருதுகளை வசனகர்த்தா ஆரூர்தாஸ், கவிஞர் மு.மேத்தா மற்றும் பின்னணிப் பாடகி பி.சுசிலா ஆகியோர் பெற்றுள்ளனர்.

**கலைஞர் பிறந்த நாள் செம்மொழி நாள்!**

கடந்த 3.6.2025 ஆம் தேதி அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 ஆம் தேதி செம்மொழி நாளாக தமிழ்நாடு அரசு சார்பில், தமிழ்நாடு முழுவதும் தமிழக மக்களும், கழகத்தினரும் சிறப்பாகக் கொண்டாடினர். சென்னை கலைவாணர் அரங்கில் கலைஞர் பிறந்த நாள் செம்மொழி நாள் விழா 3.6.2025 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு 2025 ஆம் ஆண்டுக்கான கலைஞர் செம்மொழி தமிழ்விருது, செம்மொழி நாள் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உயர்த்தப்பட்ட உதவித்தொகை ஆகியவற்றை வழங்கி தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனை மலரை வெளியிட்டு சிறப்பித்தார்.

தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக, தமிழ் மொழியின் மேன்மைக்காக தன் வாழ்நாள் முழுமையும் அர்ப்பணித்து கண் துஞ்சாது மக்கள் பணி மேற்கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டு 7.8.2018 அன்று பிரிந்தாலும் இன்றும் தமிழ்நாட்டின் மாநகரம், நகரம், ஒன்றியம், பேரூர், ஊராட்சி கிராமங்கள் வரையில் கலைஞர் அவர்களின் கால் படாத இடமே இல்லை என்று சொல்லக் கூடிய வகையில் அவ்விடங்களில் எல்லாம் இன்றைக்கு கலைஞர் அவர்கள் திருவுருவச் சிலைகளாக கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறார். அதற்கான அடித்தளம் அமைத்துக் கொடுத்து, இன்றும், நாளையும் மேலும் மேலும் பல்வேறு இடங்களில் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை அமைத்து திறந்து வைத்தும், திறந்து வைக்கவும் இருக்கும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கலைஞர் அவர்களின் 7-ஆம் ஆண்டு நினைவு நாளான இன்று (7.8.2026) நாம் நமது நன்றியை, பாராட்டை தெரிவித்துக் கொள்கிறோம்.

**வாழ்க கலைஞர்!**

**ஓங்குக கலைஞர் புகழ்!!**




சட்டப்பேரவையில் கலைஞர் திருவுருவப் படம்!



ஓமந்தூரார் தோட்டத்தில் கலைஞர் திருவுருவச் சிலை!




கிளாம்பாக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்!



மெரினாவில் கலைஞர் நினைவிடம்!



மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம்!



திருவாரூர் காட்டூரில் திறக்கப்பட்ட கலைஞர் கோட்டம்!